க்ரோதி வருஷ ஆவணி மீ
ஆகஸ்ட் - செப்டம்பர் 2024

மலர்: 7
இதழ்: 5

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:

**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com









ஆனி கருடன் - பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்

க்ரோதி ௵ ஆவணி ௴
ஆகஸ்ட் - செப்டம்பர் 2024

மலர்: 7
இதழ்: 5

ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:

# தேஸிக ஸந்தேஸம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

**காலை**

**ஞாயிறு முதல் புதன் வரை**

6.30 - விச்வரூபம்
8.30 - திருவாராதனம்
9.45 - சாற்றுமுறை

**வியாழன் முதல் சனி வரை**

6.00 - விச்வரூபம்
7.30 - பொது தரிசனம்

12.00 - உச்சிகாலம்

**மாலை**

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ அழிசூர் R. ராகவன் | ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** M.K.S. Mohan Babu, P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: yeSKay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்திமகனாய் ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்து இங்குப்பிறந்து குன்றினால் குடைகவித்து கோலக்குரவை கோத்தும் குடமாடியும் கன்றினால் விளவெறிந்தும் காலால் காளியன் தலைமிதித்து போன்ற பல தீம்புகளை செய்தும் பருங்கையானையின் கொம்பினைப் பறித்து அதன்பாகனைச்சாடிப்புக்கு ஒருங்க மல்லரைக்கொன்றும் பின் கஞ்சனின் உயிரை மாய்த்தும் ஐவர் தேரினில் கீதையைச் செப்பியும் மலர்மகளோடு மதுரை வந்து பாரத வெஞ்சமர் பார்மகள் பாரத்தை செகவுகந்தும் சரணகதி மார்க்கத்தை பறைசாற்றும் சரம ச்லோகத்தை நமக்களித்தவனும் நமது மனங்களை கொள்ளை கொண்டவனுமான கண்ணனென்னும் கருந்தெய்வத்தின் அவதார மாதம் இந்த புண்யமான ஆவணி மாதம்.

இதே ஆவணி ரோஹிணியில் அவதாரம் பண்ணினவர் பூர்வாசார்யர் 'வ்யாக்யான சக்கரவர்த்தி' என்று அழைக்கப்பட்ட பெரியவாச்சான் பிள்ளை. இவர் அருளிய நாலயிர திவ்யப்ரந்த உரையே மற்றைய பின்வந்த திவ்யப்ரபந்த உரைகளுக்கு மூலம் என்பர் பெரியோர்.

இந்த ஆவணியில் ரோஹிணி நக்ஷத்ரத்தில் 'பிது: சதகுணம் புத்ர:' என்கிற ரீதியிலே காஞ்சி பேரருளானின் அநுக்ரஹ விசேஷத்தினால் அவதரித்தவர் ஸ்வாமி தேசிகனின் ஆத்மஜரான குமார வரதாசார்யர் ஸ்வாமி. இவர், ஸ்வாமி தேசிகனின் விரோத பரிஹாரத்திற்கு வடமொழியில் உரை போன்ற எண்ணற்ற நூல்களை இயற்றி ஸ்வாமி தேசிகனுக்கு பிறகு நம் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகராக எழுந்தருளியிருந்த மஹானாவார்.

மேலும், நம் தேசிக தர்சனத்தின் அஸாதாரண சிஹ்னமாகவும், ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்திகளுக்குத் தொடக்கமாகவும், பகவத் விஷய காலக்ஷேபத்திற்கு அதிவிலக்ஷணமான தனியனாகவும் திகழ்கின்ற 'ராமாநுஜ தயாபாத்ரம்' என்னும் ஸ்வாமி தேசிகனின் புகழைப்போற்றும் ச்லோகத்தின் அவதார தினமும் இந்த ஆவணி மாதத்தின் ஹஸ்த நக்ஷத்ரத்தில் ஸம்பவிப்பது இந்த மாதத்திற்கு மேலும் பெருமை சேர்க்கின்றது.

நான்கு சாஸ்த்ரங்களில் மிக்க பாண்டித்யத்தைக் கொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ N.S.R. ஸ்வாமியின் அத்புதமான கட்டுரை, ஸ்ரீஜயந்தியைக் கொண்டாடும் விதத்தில் கண்ணனின் அத்புதமான லீலைகளையும் அவனது ஆத்மாவான பாகவதர்களின் ப்ரபாவங்களை அழகாக வரைந்த இரண்டு கட்டுரைகள், ஆங்கிலத் தொடர்கள், மேலும் நம் ஸ்ரீநிவாஸனின் திருவல்லிக்கேணி ஸஞ்சாரத்தின் வண்ணப்படங்கள் உள்பட இதர உத்ஸவங்களின் வண்ணப்படங்கள் இவற்றைத் தாங்கி இந்த க்ரோதி வருட ஆவணிமாத இதழ் உங்கள் கைகளில்...

ஸ்ரீ:

# Two Years On… A Cherished Tradition Already

## FROM THE DESK OF TRUSTEES

We are pleased to extend our warmest greetings to all of you through the pages of our monthly magazine. As Trustees of the Temple, we hold the privilege as well as the responsibility of serving the spiritual needs of our community, ensuring the smooth operation of this sacred place of worship.

It is with immense joy and devotion that we share the highlights of this month's festivities at our beloved temple. The month of Aadi holds particular significance in our temple's calendar, marked by two grand events this year: the Thiruvallikkeni visit of Perumal and Thiru Aadi-Pooram Utsavam, besides the annual Jyeshtabhishekam.

**Brundaranya Kshethra Vijayotsavam**

The divine visit of our Lord to Thiruvallikkeni is a cherished tradition that has been observed with unwavering devotion since last year as part of the Sathamana Utsavam celebrations. This holy procession, where Perumal graces the Maada Veethis of Thiruvallikkeni, is a sight to behold. During this year's Vijayotsavam, Lord Srinivasa, along with His Consorts, reached the Divyadesam to a customary, grand reception by Swami Desikan and Srimath Adivan Satakopan of Sri Ahobila Mutt, Triplicane. This was followed by a Thirumanjanam at Sri Ahobila Mutt. In the evening, there was a grand Maada Veethi Purappadu with Divya Prabandham, Yajur Vedam, Saama Vedam, and Sri Desika Sthotra goshti. The deity, adorned in splendid attire, was carried on a beautifully decorated Tholukkiniyaan, accompanied by the rhythmic sounds of Nadaswaram and Thavil. The streets were lined with devotees, young and old, who eagerly awaited the darsan of Perumal. The visit symbolises the Lord's boundless love and compassion as He steps out of His sanctum to bless His devotees in their homes. This divine journey through the heart of Triplicane fosters a deep sense of community and spiritual connection among the devotees.

The Thiru Aadi-Pooram Utsavam, followed by Oorkola Utsavam the next day, was celebrated with customary splendour.

**Annual Jyeshtabhishekam**

The Jyeshtabhishekam is another significant ritual performed in our temple. This annual Thirumanjanam is conducted for our presiding deity to invoke divine blessings and ensure the prosperity and well-being of the community. The ritual involves the sacred bathing of the deity with various holy substances, including milk, curd, honey, sandalwood paste, and turmeric, followed by the chanting of Vedic hymns and mantras. Each of these elements holds symbolic significance, purifying and energising the deity with renewed vigour. The Jyeshtabhishekam is not just a visual spectacle but also a deeply spiritual experience, as the vibrations of the mantras and the divine energy fill the temple, creating an atmosphere of sanctity and devotion. This year's Jyeshtabhishekam coincided with Garuda Panchami, with a special Thirumanjanam performed for Garudan as well.

We extend our heartfelt thanks to all the devotees, volunteers, and temple staff who contribute tirelessly to the success of these events.

We look forward to seeing you all during next month's events, including Avani Avittam and Panchrathra Sri Jayanthi.

May Perumal's blessings be with you and your families, bringing peace, prosperity and happiness to all.

# க்ரோதி வருட ஆவணி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட் / செப்டம்பர் | ஆவணி | | | | | |
| 17.08.2024 | 1 | த்ரயோதசி | சனி | பூராடம் | ஆவணி மாதப்பிறப்பு – ஸேனைநாதன் | |
| 18.08.2024 | 2 | சதுர்தசி | ஞாயிறு | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 19.08.2024 | 3 | பௌர்ணமி | திங்கள் | ச்ரவணம் | ஸ்ரீதேசிகன் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ ஸ்ரீராம் பார்த்தஸாரதி |
| 20.08.2024 | 4 | ப்ரதமை | செவ்வாய் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 21.08.2024 | 5 | த்விதீயை | புதன் | சதயம் / பூரட்டாதி | பேயாழ்வார் | |
| 22.08.2024 | 6 | த்ருதீயை | வியாழன் | உத்திரட்டாதி | திருமால்வடை | |
| 23.08.2024 | 7 | சதுர்த்தி | வெள்ளி | ரேவதி | திருமால்வடை | |
| 24.08.2024 | 8 | பஞ்சமி | சனி | அச்வினி | திருமால்வடை | |
| 25.08.2024 | 9 | ஷஷ்டி / ஸப்தமி | ஞாயிறு | பரணி | திருமால்வடை | |
| 26.08.2024 | 10 | ஸப்தமி / அஷ்டமி | திங்கள் | க்ருத்திகை | திருமங்கையாழ்வார் | |
| 27.08.2024 | 11 | அஷ்டமி / நவமி | செவ்வாய் | ரோஹிணி | ஸ்ரீபாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி. மாலை ஸ்ரீ கண்ணன் திருமஞ்ஜனம், பெருமாள், கண்ணன் ஆஸ்தானம் | ஸ்ரீ S. வீரராகவன் |
| 28.08.2024 | 12 | நவமி / தசமி | புதன் | ம்ருகசீர்ஷம் | உறியடி உத்ஸவம். பெருமாள், கண்ணன் வீதிப்புறப்பாடு. மாலை பொழுதுடன் ஆராதனம் | ஸ்ரீ S. வீரராகவன் |
| 29.08.2024 | 13 | ஏகாதசி | வியாழன் | திருவாதிரை | ஸ்ரீபாஷ்யகாரர் | |
| 30.08.2024 | 14 | த்வாதசி / வைஷ்ணவ ஏகாதசி | வெள்ளி | புனர்வஸு | குலசேகராழ்வார் | |
| 31.08.2024 | 15 | த்ரயோதசி / த்வாதசி பாரணை | சனி | புஷ்யம் | திருமால்வடை | |
| 01.09.2024 | 16 | சதுர்தசி | ஞாயிறு | ஆயில்யம் | திருமால்வடை | |
| 02.09.2024 | 17 | சதுர்தசி / அமாவாசை | திங்கள் | மகம் | திருமழிசைப்பிரான் | |
| 03.09.2024 | 18 | அமாவாசை/ ப்ரதமை | செவ்வாய் | பூரம் | கோயில் அமாவாசை – ஸ்ரீ ஆண்டாள் | |
| 04.09.2024 | 19 | ப்ரதமை / த்விதீயை | புதன் | உத்தரம் | திருமால்வடை | |
| 05.09.2024 | 20 | த்விதீயை / த்ருதீயை | வியாழன் | உத்தரம் / ஹஸ்தம் | திருமால்வடை | |

ஸ்ரீ:

## க்ரோதி வருட ஆவணி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயதாரர் |
|---|---|---|---|---|---|---|
| செப்டம்பர் | ஆவணி | | | | | |
| 06.09.2024 | 21 | த்ருதியை / சதுர்த்தி | வெள்ளி | ஹஸ்தம் / சித்திரை | ராமானுஜ தயாபாத்ர உத்ஸவம். ஸ்ரீ தேசிகன் ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | வேத பாராயண ஸபா |
| 07.09.2024 | 22 | த்ருதீயை / சதுர்த்தி | சனி | சித்திரை | மதுரகவியாழ்வார் | |
| 08.09.2024 | 23 | பஞ்சமி | ஞாயிறு | ஸ்வாதி | பெரியாழ்வார் | |
| 09.09.2024 | 24 | ஷஷ்டி | திங்கள் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 10.09.2024 | 25 | ஸப்தமி | செவ்வாய் | அனுஷம் | ஸ்ரீமந்நாதமுனிகள் | |
| 11.09.2024 | 26 | அஷ்டமி | புதன் | கேட்டை | தொண்டரடிப்பொடிகள் | |
| 12.09.2024 | 27 | நவமி | வியாழன் | மூலம் | திருமால்வடை | |
| 13.09.2024 | 28 | தசமி | வெள்ளி | பூராடம் | ஸேனைநாதன் | |
| 14.09.2024 | 29 | ஏகாதசி | சனி | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 15.09.2024 | 30 | த்வாதசி | ஞாயிறு | ச்ரவணம் | ச்ரவண த்வாதசி. ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி. காலை: ஹயக்ரீவன், தேசிகன் திருமஞ்ஜனம், தேசிகன் வீதிபுறப்பாடு, ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ச்ரவணம்: ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர். ஹயக்ரீவ ஜயந்தி: ஸ்ரீ R. வாஸுதேவன் |
| 16.09.2024 | 31 | த்ரயோதசி | திங்கள் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |

**குறிப்பு:**
15.09.2024 ஞாயிறு மாலை 8 மணி: பவித்ரோத்ஸவம் – அங்குரார்ப்பணம்
16.09.2024 திங்கள் மாலை 8 மணி: பவித்ரோத்ஸவம் – அதிவாஸம்
17.09.2024 முதல் 23.09.2024 வரை திருப்பவித்ரோத்ஸவம் – காலை, மாலை ஹோமம்
23.09.2024 திங்கள் இரவு மஹாபூர்ணாஹுதி

# ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு
12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில்,
ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் '**ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்**' இயங்கி வருகிறது.




**முகவரி மற்றும் விவரங்களுக்கு:**
**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**
9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,
மயிலாப்பூர், சென்னை – 600004.
போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# ராமாநுஜ ஸித்தாந்தமும் ராமாநுஜ ஸம்ப்ரதாயமும்

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் N.S. ராமாநுஜ தாதாசார்யர், திருப்பதி

(ஸ்ரீ ராமாநுஜ வாணியில் வெளிவந்த வ்யாஸம்)

உலகத்தில் பலவகையான ஸித்தாந்தங்களும் ஸம்ப்ரதாயங்களும் தோன்றி வழக்கத்தில் காணப்படுகின்றன. அவைகள் வைதிகம் என்றும் அவைதிகம் என்றும் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. வேதத்தைத் தழுவிய ஸித்தாந்தங்களும், ஸம்ப்ரதாயங்களும் வைதிகம் என்றும், வேதத்தை ஆதாரமாகக் கொள்ளாதவை கள் அவைதிகம் என்றும் வழங்கப்படுகின்றன. ராமாநுஜருடைய ஸித்தாந்தமும், ஸம்ப்ரதாயமும் வைதிகத்தைச் சார்ந்தவை. ராமாநுஜ ஸித்தாந்தம் என்கிற சொல் ராமாநுஜரால் தழுவப்பட்ட கொள்கை என்கிற பொருளையும், ராமாநுஜ ஸம்பரதாயம் என்கிற சொல் ராமாநுஜரால் ஏற்கப் பெற்ற குருபரம்பரை என்கிற பொருளையும் ஈண்டு குறிப்பிடும்.

ஸித்தாந்தத்திற்கும் ஸம்ப்ரதாயத்திற்கும் என்ன வேறுபாடு? என்று பலர் சங்கிக்கக் கூடும். அதை முதலில் விளக்குவோம். ஸித்தாந்தம் என்றால் அந்தந்த மதத்தில் ப்ராமாணிகம் என்று நிச்சயிக்கப்பட்ட அர்தத விசேஷம் என்று பொருள். ஸம்ப்ரதாயம் என்பதற்கு ஆசார்யன் சிஷ்யனுககு உபதேசிப்பது, அவன் தன் சிஷ்யனுக்கு உபதேசிப்பது என்கிற க்ரமத்தில் பரமபரையாகத் தொடர்ந்து வரக்கூடிய உபதேசம் என்று பொருள். இக்கட்டுரையில் ராமாநுஜர் ஏற்றுக்கொண்ட ஸித்தாந்தத்தைப் பற்றியும் அவர் தழுவிய ஸம்ப்ரதாயத்தைப் பற்றியும் விளக்கம் தருகிறேன்.

ராமாநுஜரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸித்தாந்தத்தின் ஸாரம் பின்வருமாறு:- ஜடரூபமான ப்ரபஞ்சம் உண்மையானது. கயிற்றில் தோன்றும் பாம்பு போன்று பொய்யன்று. ஈச்வரன் மூலப்ரக்ருதியிலிருந்து ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டிக்கிறான் என்று ஓதப்படுகிறது. பொய்யான வஸ்துவிற்கு ஸ்ருஷ்டி ஏது? முத்துச்சிப்பியில் தோன்றும் பொய்யான வெள்ளி ஒரு பாத்திரமாகவோ வேறு விதமாகவோ மாற்றத் தகுதியற்றது. ப்ரபஞ்சமோ மாறுதலை அடைகின்றது; ஆகவே ப்ரபஞ்சம் உண்மையானது.

லக்ஷ்மீபதியான நாராயணன் சேதனம், அசேதனம் எல்லாவற்றுக்கும் ஈச்வரன். குற்றமில்லாதவன்.



நற்குணங்களை உடையவன், ப்ரபஞ்சத்தைத் தனக்கு சரீரமாகக் கொண்டவன். பரவ்யூஹாதி திவ்யமங்கள் விக்ரஹங்களை உடையவன். உபயவிபூதி நாயகன். அவனே உபநிஷத்தில் ஓதப்படும் பரப்ரஹ்மம்.

ஜீவாத்மாக்கள் ஜடப்பொருள்களைக் காட்டிலும், பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபட்டவர்கள். ஒருவர்க்கொருவரும் வேறுபட்டவர்கள். அநாதி காலமாக ஸம்ஸரிப்பவர்களுள் ஸுக்ருத விசேஷத்தால் சிலர் உபாய விசேஷத்தை அநுஷ்டித்து ப்ரக்ருதி ஸம்பந்தத்திலிருந்து விடுதலை பெற்று ஸ்ரீவைகுண்டமாகிற அப்ராக்ருத உலகிற்குச் சென்று அங்கு பரமனை அடைந்து ஸகலகுண பூர்ணனான அவனை ஸாக்ஷாத்கரித்து அதனால் பேரின்பமெய்துகிறார்கள். இவ்விதமான ஆனந்த ப்ராப்தியே மோக்ஷம்.

இவ்விதமான மோக்ஷத்தை அடைவதற்கு பக்தி, ப்ரபத்திகள் உபாயங்கள். இவ்வுபாயங்களால் ப்ரீதனான எம்பெருமான் மோக்ஷமாகிய பேரின்பத்தைத் தருகிறான். இதுதான் ஸித்தாந்த ஸாரம்.

இந்த ஸித்தாந்தத்தில் ப்ரஹ்மமானது சேதனா சேதனாத்மக ப்ரபஞ்ச விசிஷ்டம். அதாவது எம்பெருமான் சேதனவஸ்துக்களையும் அசேதனவஸ்து க்களையும் உடையவன் (அவைகளை சரீரமாக உடையவன்) என்று ஒப்புக்கொள்ளுகின்றபடியால், இதற்கு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் என்கிற பெயர் வழங்கலாயிற்று.

வேதவாக்யங்கள் பலவகையாக உள்ளன. சில ப்ரபஞ்சத்திற்கும் எம்பெருமானுக்கும் பேதத்தை அறிவிக்கின்றன. சில இருவருக்கும் அபேதத்தை அறிவிக்கின்றன. சில, ப்ரபஞ்சம் எம்பெருமானுக்கு சரீரம், எம்பெருமான் ப்ரபஞ்சத் திற்கு ஆத்மா என்று கூறும் முகத்தாலே ப்ரபஞ்சத் திற்கும் எம்பெருமானுக்கும் சரீராத்மபாவம் என்கிற ஸம்பந்தத்தை அறிவிக்கின்றன. அத்வைத மதத்தைச் சார்ந்தவர்கள் அபேத ச்ருதியை ஏற்றுக்கொண்டு பேத ச்ருதியைத் தள்ளி விட்டனர். த்வைத மதத்தைத் தழுவியவர்கள் பேத ச்ருதியை ஏற்றுக்கொண்டு அபேத ச்ருதியைத் தள்ளிவிட்டனர். இரண்டு ச்ருதிகளும் ஒன்றுக்கொன்று சேராமல் முரணானவை என்று அவர்கள் அபிப்ராயம். நம்மிராமானுசரோ ‘இரண்டு ச்ருதிகளுக்கும் விரோதமில்லை. இதனை சரீராத்ம பாவம் என்கிற ஸம்பந்தத்தைக் கொண்டு நிர்வஹிக்கலாம்’ என்று நிலைநாட்டினார். அதாவது ப்ரபஞ்சத்திற்கும் எம்பெருமானுக்கும் ஸ்வரூபத்தில் வேற்றுமை இருப்பதால் அதைக் கூறுகின்றன பேத ச்ருதிகள். ப்ரபஞ்சம் ப்ரஹ்மமே என்று கூறும் அபேதச்ருதிகளுக்கு ப்ரபஞ்சத்தை சரீரமாக உடையவன் எம்பெருமான் என்று பொருள்.

எல்லாம் பொய்யானபடியாலே ‘எல்லாம் ப்ரஹ்மம்’ என ஓதப்படுகிறது. இது அத்வைத ஸித்தாந்தத்தில் செய்யப்படும் வ்யாக்யானம். எல்லாம் எம்பெருமானுடைய சரீரமானபடியாலே எல்லாம் ப்ரஹமம் எனப்படுகிறது. இது ராமானுசரின் வ்யாக்யானம்.

அபேத ச்ருதி உள்ள ப்ரகரணங்களை நன்கு ஆராய்ந்து பார்த்தால் எங்காவது அத்வைதிகளின் வ்யாக்யானத்திற்கு இடமிருப்பதாகக் காணவில்லை. எல்லாம் எம்பெருமானால் ஸ்ருஷ்டிக்கப் படுகிறபடியாலும் ரக்ஷிக்கப்படுகிற படியாலும், ஸம்ஹரிக்கப் படுகிறபடியாலும் ‘எல்லாம் எம்பெருமான்’ என்கிறது சாந்தோக்யோபநிடத வாக்யம். ‘எம்பெருமான் எல்லா வஸ்துக்களிலும் உள்ளபடியாலே எம்பெருமானே நான்’ என்கிறார் ப்ரஹ்லாதாழ்வான். பரமபுருஷன் எல்லாவற்றையும் வ்யாபித்துள்ளபடியால் புருஷனே எல்லா ப்ரபஞ்சமும் என்கிறது புருஷஸூக்தம். ப்ரபஞ்சத்தை ஸ்ருஷ்டித்து அதனுள் ப்ரவேசித்து அதுவே காரணமாக பரமன் சேதனனும் அசேதனனும் ஆகிறான் என்கிறது தைத்திரீய உபநிஷத். ‘எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்துள்ளபடியாலே ஹே! க்ருஷ்ண! எல்லாம் நீ ஆகின்றாய்’ என்பது கீதையில் அர்ஜுனனுடைய வாக்யம்.

ப்ரமாண வசனங்களில் எல்லாம் பொய்யானபடியாலே எல்லாம் எம்பெருமான் என்று எங்கேயும் கூறப்படவில்லை. ஆகவே எம்பெருமானாருடைய வ்யாக்யானம் எல்லா ச்ருதி வாக்யங்களையும் ஸமரஸப்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது. இதையே ஸ்வாமி தேசிகனும் ஸங்கல்ப ஸூர்யோதத்தில் ‘மிதோ பேதம்‘ என்ற ச்லோகத்தில் அருளிச்செய்தார்.

ப்ரபஞ்சமெல்லாம் எம்பெருமானுக்கு சரீரமென்று ஒப்புக்கொண்டால், இரண்டு சங்கைகள் முக்யமாகத் தோன்றக்கூடியவை. புண்யபாப கர்ம பலமாகிய ஸுகது க்க அனுபவங்களுக்கு ஸாதனமாய் இந்திரியங்களுக்கு ஆச்ரயமாய் ப்ராணனால் தரிக்கப்படுமதாய், பஞ்சபூத விகாரமான வஸ்து ‘சரீரம்’ என உலகில் வழங்கப்படுகிறது. எம்பெருமானுக்கு கர்மம் ஏது? அதன் பலனாகிய ஸுகதுக்கானுபவம் தான் ஏது? ப்ராணன் ஏது? ஆகையால் அவனுக்கு ப்ரபஞ்சம் சரீரமாக எப்படி அமையும்? என்பது முதல் சங்கை. அப்படி சரீரம் என ஒப்புக்கொண்டாலும் நமக்கு சரீர ஸம்பந்தம் ஸுகதுக்கங்களுக்குக் காரணமாவது போல் அவனுக்கும் ஸுகதுக்கங்கள் வந்தே தீரும். ஒரு சரீரமுள்ளவனே அநேக இன்னல்களுக்கு ஆளாகும் போது ப்ரபஞ்சத்தையே சரரீமாக உடையவன் எவ்வளவு துக்கங்களை அனுபவிக்க தேரும்? என்பது இரண்டாவது சங்கை.

இவ்விரண்டு சங்கைகளுக்கும் எம்பெருமானார் காட்டும் பரிகாரமாவது சரீரத்துக்கு முன்பு காட்டிய லக்ஷணம் சரியன்று. எது இருக்குமளவும் எவனுக்கு ஆதேயமாய், நியாம்யமாய், சேஷமாய் உள்ளதோ, அது அவனுக்கு சரீரம் என்பதே சரீர லக்ஷணம்.

ப்ரபஞ்சமெல்லாம் பரமாத்மாவுக்கு ஆதேயமாயும் நியாம்யமாயும் சேஷமாயும் இருப்பதால் சரீரம். கர்மாவினால் ஏற்பட்ட சரீரமே ஸுகதுக்கங்களுக்குக் காரணம். எம்பெருமான் ப்ரபஞ்சத்தை சரீரமாக ஏற்றுக் கொண்டது கர்மாவினால் அன்று, பின்பு ஸங்கல்பத்தினால். ஆக இரண்டு சங்கைகளுக்கும் இடமில்லை.

இம்மாதிரி பேத ச்ருதி, அபேத ச்ருதி இரண்டிற்கும் சரீராத்ம பாவத்தை இட்டு விரோதமில்லாமல் பொருள் கூறிய பெருமை எம்பெருமானாரைச் சாரும். ஆனால் அதற்கும் ஆழ்வார் அருளிச்செயலிலிருந்து கிடைத்த குறிப்பை எம்பெருமானார் ஆதாரமாகக் கொண்டார் என்பதைச்சிறிது விளக்குகிறேன். நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய திருவாய்மொழியில் முதற்பத்தில் முதல் திருவாய்மொழியில் இரண்டாம் பாசுரத்தால், சேதனாசேதனங்களைக் காட்டிலும் எம்பெருமான் விலக்ஷணன் என்றருளிச்செய்து, மூன்றாம் பாசுரத்தாலே எம்பெருமானுக்கு லீலார்த்தமான ஜகத் விபூதி யோகத்தை அருளிச்செய்து, 'நாமவனிவன்' என்று தொடங்கும் நான்காம் பாசுரத்தாலே அநேகவிதமான சொற்களாலே சொல்லப்படுகிற எல்லா பதார்த்தங்களும் எம்பெருமானே என்றருளிச்செய்தார். மேல் ஆறாம் பாட்டிலும் 'நின்றனர் இருந்தனர்' என்று தொடங்கி, எல்லாவிதமான ப்ரவ்ருத்திகளைச் செய்யும் எல்லா பதார்த்தங்களும் எம்பெருமானே என்று ஸமானாதிகரணமாக நிர்தேசம் பண்ணினார். இப்படி 'எல்லாம் பரமபுருஷனே' என்று குறிப்பிடுவதற்கடி சரீராத்ம பாவமாகிற ஸம்பந்தமே என்பதை ஏழாவது பாசுரத்தில் 'உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்' என்ற அடியினால் அருளிச்செய்கிறார். சரீரத்தில் ஆத்மாவைப்போல்

எல்லா வஸ்துக்களிலும் எம்பெருமான் வ்யாபித்துள்ளான். 'கரந்து' என்கிற சப்தத்திற்கு வ்யாப்ய பதார்த்தங்களுக்குத் தெரியாமல் என்று பொருள். 'யஸ்ய ப்ருதிவீ சரீரம், யத்ப்ருதிவீ மந்தரேயமதி, யம்ப்ருதிவீநவேத' என்கிற ச்ருதி வாக்யத்தை ஆழ்வார் ஈண்டு தமிழாக்கியுள்ளார்.

ஆக இந்த ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை ஆதாரமாகக் கொண்டு எம்பெருமானார் எல்லா ச்ருதிகளையும்



முரண்படாமல் நிர்வஹித்தருளினார் என்பது தேரிற்று. ஸ்ரீமத் சங்கராசார்யரும் ஓரிடத்தில் 'எல்லாமாக நிற்பவர் பரமாத்மா' என்கிற அபேத ச்ருதி வாக்யங்களுக்கு சரீராத்ம பாவமே அடிப்டையான ஆதாரம் என்று கூறுகின்றார். (ததபித்யாநாதேவ தல்லிங்காத்ஸ:) என்கிற ஸூத்ரத்தில் 'அந்த பரமேச்வரன் தேஜஸ் முதலிய பதார்த்த ரூபத்தில் நின்றுகொண்டு பதார்த்தங்களை த்யானம் செய்து ஸ்ருஷ்டிக்கிறான்' என்று கூறி அதற்கு ஸாதகமாக ய: ப்ருதிவ்யாம் திஷ்டந், யஸ்ய ப்ருதிவீ சரீரம்' என்கிற ச்ருதிவாக்யத்தை மேற்கோளாகக் காட்டுகின்றார். ஆகவே இந்த தத்வத்தை சங்கராசார்யர் உணர்ந்திருந்தும், தம் ஸித்தாந்தமாக பெற்றுக்கொள்ளாமற் போனார். அதை ஏற்றுக்கொண்டால் எல்லா விதமான சிக்கல்களையும் பரிஹரிக்கலாம் எனக் கருதினார் எம்பெருமானார். இதுவே எம்பெருமானார் ஸித்தாந்தத்துக்குள்ள ஏற்றம்.

இனி எம்பெருமானார் தழுவிய ஸம்ப்ரதாயத்தைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். ஸம்ப்ரதாயம் என்கிற சொல்லுக்கு குருபரம்பரை என்றும், குருபரம்பரையாக வரும் உபதேசம் என்றும் பொருள். உலகில் எத்தனையோ ஸம்ப்ரதாயங்கள் உள்ளன. அதில் சாஸ்த்ரத்தை அநுஸரிக்கும் ஸம்ப்ரதாயங்களும் உள்ளன. சாஸ்த்ரத்தை அநுஸரிக்காத ஸம்ப்ரதாயங் களும் உள்ளன. (அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாய ரஹிதை, ரதயாபி நாலக்ஷித:) என்று நம் ஸம்ப்ரதாயம் கொண்டாடப்படுகின்றது.

முதலில் எம்பெருமானார் வரை உள்ள குருபரம்பரையைப் பார்ப்போம். ப்ரதம குரு ச்ரிய:பதி. இரண்டாவது பிராட்டி, மூன்றாவது விஷ்வக்ஸேனர். பிறகு நம்மாழ்வார், பிறகு நாதமுனிகள் என்று க்ரமம். எம்பெருமானுக்கும் நம்மாழ்வாருக்கும் நடுவில் இருந்த குருபரம்பரையைப் பற்றி விவரமாகத் தகவல் கிடைக்கவில்லை. வ்யாஸர், போதாயனர், டங்கர், த்ரமிடர் முதலிய பல ஆசார்யர்கள் இருந்துள்ளனர். அந்த ஸம்ப்ரதாயம் நடுவில் விச்சின்னமாகி, பிறகு நம்மாழ்வாரால் ப்ரவர்த்திப்பிக்கப் பட்டது.

எல்லா மதங்களிலும் அந்தந்த மதப்ரவர்த்தகர்களுக்கு முன்பு குருபரம்பரையைத் தொடர்ச்சியாகக் காட்ட முடியவில்லை. நம்மாழ்வாருக்கும் நாதமுனிகளுக்கும் நடுவில் அநேக வருஷங்கள் வித்யாசம் இருந்தாலும், இரண்டு வகையில் நாதமுனிகளுக்கு நம்மாழ்வார் ஆசார்யர் ஆகிறார். நம்மாழ்வாருடைய சிஷ்யர் மதுரகவிகள், மதுரகவிகளின் திருவம்சத்தில் அவதரித்தவர் பராங்குசதாஸர் என்பவர். பராங்குச தாஸர் நாதமுனிகளுக்குக் கண்ணினுண் சிறுத்தாம்பு என்னும் ப்ரபந்தத்தை உபதேசித்தார். ஆக இந்த வரிசை க்ரமத்தில் நம்மாழ்வார் ஆசார்யர் என்பது ஒருவகை. திருக்குருகூரில் திருப்புளியாழ்வார் அடியில் நாதமுனிகள் யோகம் செய்துகொண்டிருந்தார்,



அப்பொழுது பரவாஸுதேவன் நியமனத்தால் நம்மாழ்வார் மறுபடியும் நாதமுனிகளுக்காகவே இவ்வுலகத்தில் அவதரித்து நேரில் அவருக்கு ஸகலமான வேதார்த்தங்களையும் அருளிச்செயல் களையும் உபதேசித்தருளினார். இந்த முறையில் ஆழ்வார் நாதமுனிகளுக்கு நேராகவே ஆசார்யராகிறார் என்பது இரண்டாவது வகை. நாதமுனிகள் யோக ரஹஸ்யம், ந்யாய தத்வம் என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார்.

நாதமுனிகளுக்குப் பிறகு ஆளவந்தார் நம் ஸம்ப்ரயதாயத்தில் ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ நாதமுனிகளுக்குத் திருப்பேரனார் ஆளவந்தார். பிதாமஹனும் பேரனும் ஸமகாலத்தில் எழுந்தருளியிருக்கும் வாய்ப்பு இருந்தது. தம் பேரனாருக்குத் தாமே நேரில் உபதேசித்துத் தாமே ஆசார்யனாக ஆகியிருக்கலாம். அப்படிச் செய்யாமல் உய்யக்கொண்டாரை அழைத்து, ஆளவந்தாருக்கு வேதாந்த ஜ்ஞானத்தை ஸம்பாதிக்கவேண்டும் என்ற ஆர்வம் எப்பொழுது உண்டாகிறதோ, அப்பொழுது உபதேசிக்கும்படி நியமிப்பானேன் என்று கேள்வி ஏற்படலாம்.

இதற்கு மூன்றுவிதமாக ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாய பரிசுத்தியில் ஸமாதானம் அருளிச்செய்கிறார். (1) ஒரு ஆசார்யனிடம் ஒரு சிஷ்யன் வேதாந்த வித்தையைப் பெற்றால், அந்த ஆசார்யனுடைய புத்ரன், பௌத்ரன் முதலியவர்களும் அந்த சிஷ்யனிடம் உபதேசம் பெற யோக்யமான பாத்ரங்கள் என்னும் உண்மையை உலகிற்கு அறிவிக்க விரும்பினார் நாதமுனிகள். (2)

ஒரு சிஷ்யன் ஒரு ஆசார்யனிடம் உபதேசம் பெற்று ப்ரஸித்தனாக விளங்கினால் அந்த ஆசார்யனின் புத்ர, பௌத்ராதிகள் அந்த சிஷ்யனிடம் நம் முன்னோரிடம் வாசித்தவர்தானே இவர் என்று மதியாமலிருப்பர். அவரைத் தாங்கள் ஆச்ரயிக்கக் கூடாது என்றும் நினைக்கக்கூடும். அம்மாதிரி நினைக்கக் கூடாது. தங்களுக்கு முன்பே தங்கள் முன்னோரிடம் ஆச்ரயித்த சிஷ்யர்கள் ஜ்ஞானாதிகரானால் தங்களுக்கு முற்பட்டவர்களென்று கொண்டு அவர்களைத் தாங்கள் ஆசார்யராக ஆச்ரயிக்கவேண்டும் என்பதையும் உலகுக்குக் காட்ட விரும்பினார் நாதமுனிகள். (3) சிஷ்யனுக்கு வேதாந்த விஷயத்தைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆகாங்க்ஷை இருந்தால் தான் உபதேசிக்க வேண்டும். இராவிட்டால் உபதேசிக்கப்பட்ட அர்த்தங்கள் மனதில் நிலைத்து நில்லா. அவ்வமயம் ஆளவந்தார் ராஜ்ய போகத்தில் ஈடுபட்டிருந்தபடியால் வேதாந்தத்தைக் கேட்க ஆர்வம் அவருக்கு இல்லை. இந்த நிலையில் உபதேசிக்கக்கூடாது என்பதையும் உலகுக்குக் காட்ட விரும்பினார் நாதமுனிகள்.

இந்த மூன்று காரணங்களையும் மனத்திற் கொண்டே நாதமுனிகள் தம் பேரனாசான ஆளவந்தாருக்கு தாம் ஆசார்யனாகவில்லை. நாதமுனிகள் சிஷ்யரான உய்யக்கொண்டாரும் தம் ஆசார்யன் நியமனப்படி ஆளவந்தாருக்குத் தாம் நேரில் உபதேசிக்க முடியவில்லை. தம் சிஷ்யரான மணக்கால் நம்பியைக் கொண்டே உபதேசிக்கச் செய்ய வேண்டியிருந்தது. அவரும் ஒருவிரகாலே ஆளவந்தாருக்கு ஆகாங்க்ஷையைப் பிறப்பித்தே உபதேசித்தார் என்பதும் சரித்ர ப்ரஸித்தமான விஷயம்.

ஸ்ரீ ஆளவந்தார் நியமனத்தாலே பாஷ்யகாரரை சிஷ்யராகப் பெரிய நம்பிகள் ஏற்றுக்கொண்டார். அப்போது தாமே எல்லா விஷயங்களையும் உபதேசியாமல், தமக்கு ஸப்ரஹ்மசாரியான திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்த சிக்ஷை செய்வித்தார். திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கச் செய்தார். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல்வார்த்தை கேட்கச் செய்தார். பெரிய திருமலை நம்பிகள் பக்கலிலே ஸ்ரீமத்ராமாயண விசேஷார்த்தங்களைக் கேட்கச் செய்தார். ஆகவே எம்பெருமானார் பஞ்சாசார்ய பராயணராகிறார்.

இங்கு ஒரு ஸந்தேஹம் எழக்கூடும். எம்பெருமானார் ப்ரஹ்மஸூத்ராதி வேதாந்த க்ரந்தங்களை யார் பக்கலிலே கேட்டார்? யாதவ ப்ரகாசரிடத்தில் அத்வைதம் வாசித்தார் என்பது உண்மையே. ஆனால் நம் ஸித்தாந்தாநுகுணமான க்ரந்தங்களை எங்கு அதிகரித்தார்? இந்த கேள்விக்குச் சரியான விடை கிடைக்கவில்லை. ஆராயப் படவேண்டிய விஷயமிது. இருந்தாலும் ஒருவிதமாக ஸமாதானம் கூறலாம். நாதமுனிகள், ஆளவந்தார் ஸ்ரீஸூக்திகளையும், திருவாய்மொழி முதலிய அருளிச்செயல்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் குருமுகமாகக் கேட்டபடியால் அதை ஆதாரமாகக் கொண்டு அந்த ஸமயம் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு ஸித்தாந்தாநுகுணமான பாஷ்யம் ஒன்றும் இராததால், தாம் காஷ்மீரில் போதாயன வ்ருத்தியைக் கடாக்ஷித்த பிறகு அதிலுள்ள விஷயங்களையும் ஏற்கனவே கேட்டுள்ள விஷயங்களையும் சேர்ந்து, ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை அருளிச்செய்து அதன் முகமாக ஸம்ப்ரதாயத்தைப் பரப்பினார் என்றே கொள்ளவேண்டும்.

இந்தமாதிரி கேள்விகள் எல்லா மதத்திலும் வரக்கூடியவை. சங்கராசார்யர் அருளிச்செய்த பாஷ்யத்திற்கு முன்பு அதிலுள்ள விஷயங்களைக் குறிப்பிடும் க்ரந்தம் இராததால் அவர் யாரிடம் அவ்விஷயங்களைத் தெரிந்து கொண்டார் என்றும் கேள்வி வரலாமல்லவா? இதையெல்லாம் மதப்ரவர்த்தகர்களுக்கு சில ஸ்வாதந்த்ர்யங்கள் உண்டு. ஆகையால் நாம் அதிகமாக ஆராய்வது தகுதியன்று. எப்படியும் அஸாதாரண ஸித்தாந்தக் கொள்கைகளை ஸத்ஸம்ப்ரதாயம் மூலமாக எம்பெருமானார் பெற்றபடியால், அவர் நிலைநாட்டிய ஸித்தாந்தமும் அவர் தழுவிய ஸம்ப்ரதாயமும் மிகச் சிறந்தன என்பதை ஒருவாறு எழுதி அடியேனும் பிங்களவாண்டு மஹோத்ஸவ மலரில் பங்குகொண்டு க்ருதார்த்தனாகிறேன். ✻

| ஆவணியில் முக்கிய உத்ஸவங்கள் |
|---|
| **ச்ரவணம் / ருக், யஜுர் உபாகர்மா**<br>ஆகஸ்ட் 19 (திங்கள்) |
| **ஸ்ரீஜயந்தி**<br>ஆகஸ்ட் 27 (செவ்வாய்) |
| **உறியடி உத்ஸவம்**<br>ஆகஸ்ட் 28 (புதன்) |
| **ஸாம உபாகர்மா**<br>ஸெப்டம்பர் 5 (வியாழன்) |
| **'ராமாநுஜ தயாபாத்ரம்' தனியன் திரு அவதார உத்ஸவம்**<br>ஸெப்டம்பர் 9 (திங்கள்) |
| **ஸ்ரீ ஹயக்ரீவ ஜயந்தி - ச்ரவணம்**<br>ஸெப்டம்பர் 15 (ஞாயிறு) |







ஸ்ரீ ஸுதர்சந ஹோமம்





ஸ்ரீ:



ஸ்ரீ ஸுதர்சந ஹோமம்









## ஸ்ரீ ஸுதர்சந ஹோமம்











ஸ்ரீ:





ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்











## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்








ஸ்ரீ:






## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்














## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்














ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்








## ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்







ஸ்ரீ:



ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்








ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்





ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்














ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்






## திருவாடிப்பூரம்









திருவாடிப்பூரம்







ஊர்கோல உத்ஸவம்

ஸ்ரீ:

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# திருப்பவித்ரோத்ஸவப் பத்திரிகை

**பசலி 1434 ~ க்ரோதி வருஷம் ~ 2024**

**17.09. 2024 முதல் 23.09.2024 வரை**

ஶ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய், அர்ச்சாரூபியாய், அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பனாய் ஆச்ரிதோஜ்ஜீவனார்த்தம் ஆங்காங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவனும், முதலாழ்வார்கள் மூவரில் ஒருவராகிய, ஸ்ரீபேயாழ்வார் அவதாரஸ்தலமுமாயும், தூப்புல் நிகமாந்த மஹாதேசிகனைக் கொண்டு அனுபவித்து வரும் ஸ்தலமுமாகிய திருமயிலையில் எழுந்தருளியிருப்பவனுமான ஸ்ரீதிருவேங்கடமுடையான் நாளது சோபக்ருத் வருஷம் புரட்டாசி மாதம் 01ம் தேதி (17.09.2024) திங்கட்கிழமை முதல் பவித்ரோத்ஸம் ஆரம்பித்து நடத்திக் கொள்வதாக ஸங்கல்பித்துக்கொண்டிருக்கிறான்.

மேற்படி உத்ஸவத்தில் வேதபாராயணம், அத்யாபகம், க்ரந்த பாராயணம் ஆகிய கைங்கர்யங்களில் ஸ்வாமிகள் அன்வயித்து, மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீபேயாழ்வார் மற்றும் ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

அங்குரார்ப்பணம் – 15.09.2024 – ஞாயிற்றுக்கிழமை மாலை
அதிவாஸம் – 16.09.2024 – திங்கட்கிழமை மாலை
மஹாபூர்ணாஹுதி – 23.09.2024 – திங்கட்கிழமை
தினசரி ஹோமம் – காலை 8:30 மணி மற்றும் இரவு 8:15 மணி
பிரதி தினம் மாலை 6.15 மணிக்கு பெருமாள், தேசிகன் திருவீதி புறப்பாடு

R. *ராகவன்*, R. *அனந்த பத்மநாபன்*, R. *முகுந்தன்*
*தர்மகர்த்தாக்கள்*

# அவன் மாயனே!

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

அங்கே ஆணிப்பொன்னால் செய்த வண்ணச் சிறுத் தொட்டில் ஒன்று! அதிலே குழந்தை கண்ணன் தூங்குகின்றான்! என்ன அழகு! என்ன அழகு! தாய் யசோதை ரசிக்கிறாள்! கள்ளம் சிறிதுமற்ற பால் வடியும் பிள்ளை முகம்! இவன் என் செல்வம்! பேதைக்குழவி கையில் பிடித்து வாயில் வைத்து சுவைத்துண்ணும் பாதக்கமலங்கள்! வெள்ளித்தளை இலங்கும் கணைக்கால்கள்! தவழ்ந்த திறம் காட்டும் முழந்தாள்கள்! உந்தி, உதரம் என்று அங்கம் தோறும் அழகு கொப்பளிக்கும் தம் மைந்தனைக் கண்டு உச்சி மோந்து மகிழ்ந்தவள் பிறர் கண்ணெச்சில் படாதவாறு த்ருஷ்டியும் கழிக்கிறாள்! சுகசுப்த பரந்தப:, உறங்கும்போது கூட இவர் எத்தனை அழகு என்று தன் கணவனைக்கண்டு மகிழ்ந்தவள் சீதை! அதுபோல் இவளும் உறங்கும் தன் பிள்ளையின் அழகைக் கண்டு பூரிக்கிறாள்! பின்னர் உள்ளத்தே ஒரு சிந்தனை! இவனைப் பலரும் மாயன் என்கிறார்களே! என் இச்சிறு மதலை மாயனா? மனம் கலங்குகிறாள்

சற்றே அகன்றவள் ஓர் அலறல் ஒலி கேட்டு ஓடி வருகிறாள்! தாயாய் வந்த ஒரு பேயின் நிலை கண்டு ஸ்தம்பித்து நிற்கிறாள்! பிள்ளையை வாரியெடுத்து அணைத்துக் கொள்கிறாள்! உள்ளம் பதைக்கிறது! நல்லவேளை! குழந்தைக்கு ஒன்றும் ஆகவில்லை! பாலூட்டியவள், பால் பருகியவன் என இருவர் நிலைமையையும் காண்கிறாள்! என்ன விந்தை இது! பேதைக் குழவி செய்யும் செயலா இது? மாயன்தானோ? சிந்திக்கிறாள்!

அடுத்தொரு நாளில் பஞ்சினும் மெல்லிய பாதங்கள் உதைக்கச் சகடம் ஒன்று நொறுங்கிப்போனது! முன்னொரு காலத்தில் பாததூளிகள்பட்டு கல் ஒன்று பெண்ணாகியதாம்! கேட்டதுண்டு! இன்றோ, இச்சின்னஞ்சிறு பாதங்களால் இரண்டு மருத மரங்கள் முறிந்து மானிட உருக்கொண்டு மறைந்தனவே! இது என்ன மாயம்! இவன் மாயனோ! மயங்குகிறாள்!

மாயன்தான் இவன்! மாயன் என்னும் சொல்லுக்கு ஆச்சர்யமான செயல்களைச் செய்பவன் என்பது ஆன்றோர் தரும் விளக்கம்! பிறந்தது முதலாகவே இப்பிள்ளை செய்ததெல்லாம் இவன் மாயன்தான் என்பதை மறுக்கவியலாதபடி உறுதிப் படுத்துகின்றனவே! பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் இவன் வந்து பிறந்தது அவ்வாயர் சிறார்களுடன் ஆடித் திரியும் ஆசையில்தான்! அஹம்





வோ பாந்தவோ ஜாத: என்றான். என்னைக் கண்டு அஞ்சவேண்டாம், உங்கள் உறவையும் நட்பையும் பெற்று மகிழவே உங்களிடம் வந்தேன் என்றான். கற்றினம் மேய்க்கப்பெற்றேன் காடுவாழ் சாதியும் ஆகப் பெற்றேன் என்கின்றான். ஆனால் இவன் பேச்சும் செயலும் பொருந்தவில்லையே. இவன் மாயன்தான்!

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா-துரத்யயா என்றான்! முக்குணங்களாலான இம்மாயை என்னுடையது. இம்மாயையைக் கடந்து என்னுடைய திருவடிகளை அடைவதற்கு நான் ஒருவனே உபாயம் என்றான்! இத்தகு உபாய, உபேயங்களைக் காட்டித்தரவென்றே இவன் எடுத்த அவதாரம் இது! மாயையை உடையவன் மாயன் தானே, எனவே இவன் மாயனே!

மத்தஸ்ம்ருதி அபோஹநஞ்சம என்றான். உன்னை ஒன்றை நினைக்கச்செய்யவும், பின் மறக்கச்செய்யவும் நானே காரணம் என்கிறான் கீதையில்! இதனை ஆயர்பாடியில் நாமும் காணலாம்! வெண்ணை களவாடியதற்காக ஆய்ச்சிகள் கண்ணிக்குறுங்கயிற்றினால் கட்டவும் அடிக்கவும் தன்னை ஒரு மானுடப் பிள்ளையாய் காட்டிக்கொண்டு நின்றவன் வையமேழும் தம் வாயில் காட்டி அவர்களுக்குத் தன்னை இன்னாரென்று காட்டி க்கொடுத்துவிட்டான்! அவர்களும் இதை உணர்ந்து இவன் ஆயர் புத்திரன் அல்லன் அருந்தெய்வம் என்று பல்பறை கொட்ட நின்று ஆடினர், பாடினர். ஆனால் அந்தோ! அடுத்த கணமே அவர்களை மாயையால் மறக்கச் செய்தான்! மீண்டும் வெண்ணை களவும் மத்தினால் மொத்தும் மாறுதல் ஏதுமின்றி வழக்கம்போல் தொடர்ந்தன. இவன் மாயன் தானே!

பாவம் யசோதை. இப்பிள்ளையுடன் படுபாடு படுகிறாள். தன் நிலையை நமக்கும் அழகாகப் புரியவைக்கிறாள். அள்ளி நீ வெண்ணை விழுங்க அஞ்சாது அடியேன் அடித்தேன் என்று பாடுகிறாள். கலம் நிறை வெண்ணையை அள்ளி அள்ளி உண்டால் நம் சிறு வயிறு தாங்குமா என்று துளியும் அஞ்சாது இவன் உண்டான். அவளுக்குப் பொறுக்கவில்லை. கண்டிப்பதும் தண்டிப்பதும் தாயின் உரிமை! பெற்ற தந்தைக்கும் பிறந்த பிள்ளைக்கும் பயந்தால் ஆகுமா? . இப்படி ஒரு விஷமமா! அஞ்சாது அடித்தேன் என்கிறாள்! அடுத்தகணம் இதென்ன விந்தை! அடித்தவளே அடியேன் என்கிறாளே! இதுதான் அவன் செய்த மாயம்! மாயையின் வயப்பட்டு வெகுண்டு அடித்தவள் உடனே ஸ்வரூப ஜ்ஞானம் கைவரப்பெற்று தன் நிலை உணர்ந்து அடியேன் என்கிறாள்! அவன் சேஷி; நாம் சேஷபூதர்களன்றோ! அவன் அருந்தெய்வம் என்பதை மறந்து அடித்துவிட்டேனே என்ற எண்ணம் வர உடனே அடியேன் என்கிறாள்! என்ன ஓர் உணர்ச்சிக் குவியல்! இதற்குக் காரணமான இவன் மாயனே!

தொட்டிலில் கிடக்கும் பிள்ளையின் வயிறு ஒட்டிக் கிடக்கிறதே! தாயுள்ளம் தாங்குமா? குழந்தையை அம்மம் உண்ண அழைக்கிறாள் ஆதங்கத்துடன்! நேற்று இரவும் உண்ணாது உறங்கிவிட்ட நீ உடனே எழுந்து வந்து உன் திருவுடைய வாய்மடுத்துத் திளைத்து உதைத்துப் பருகிடாயே என்று அழைக்கிறாள்! அழைத்த அவளே பின்னொரு ஸமயம் அத்தா! உன்னை அறிந்துகொண்டேன் உனக்கு அஞ்சுவன் அம்மம்தரவே என்றுகூறி ஆரா இன்னமுது உண்ணத்தருவன் நான், அம்மம் தாரேனென்று சாற்றிச் சொன்னாளே! அன்புடன் ஒரு ஸமயம் அழைப்பதும் பின்னொரு ஸமயம் அஞ்சுவதும், ஈதென்ன மாயம்? இதுவும் அவனது மாயமே!

ஞாலத்துப் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர்! என்னைப்போல் மற்றாருமில்லை என்று





பெருமையுடன் பேசியவள் தன் பிள்ளையைப் பிறர் தூற்றக் கேட்கையில் பாவியேன் என்று தன்னை நொந்துகொள்வதும் வாத்ஸல்யமே வடிவெடுத்த ஒரு தாய்மையின் எல்லை நிலமன்றோ! அரியன் இவன் எனக்கு என்று கூறி வாமனநம்பி வருக வருகவெனப் பாடும்பொழுதே அசலகத்தார் பரிபவம் பேச தரிக்ககில்லாப் பாவியேன் என்று கண்கலங்குவதை வேறு எப்படித்தான் சொல்வது? குடையும் செருப்பும் கொடாதே என்பிள்ளையை கடிய வெங்கானிடைக் கால் அடி நோவக் கன்றின்பின் போக்கினேன் எல்லேபாவமே என்று கண் கலங்கும் இவள் பின்னர் புழுதி அளைந்த பொன்மேனியனாய் கன்றுகளின் பின்னே வரும் கடல்வண்ணனின் தோற்றம் கண்டு களிப்படைவதும் உண்டு! அவளை இவ்விதம் கலங்கவும் களிக்கவும் செய்த இந்த ஆயன் மாயனேயன்றோ!

அம்மம் உண்ண மட்டுமா? இவனைத் துயில் கொள்ளவும் துயில் எழவும், நீராடவும், ஆடை அணியவும், தலைவாரி பூச்சூடவும், காப்பிடவும் என்று எத்தனை தரம் அழைக்கிறாள்! வருந்தி அழைத்தாலும் வாராது போக்கு காட்டும் இப்பிள்ளையை வெண்ணெய் அமுது செய்ய மட்டும் அழைக்கவே வேண்டாம்! அன்புத்தாய் தருவது பாதி, தானே எடுத்துக் கொள்வது மீதி! தாயிடம் கெஞ்சிக் கூத்தாடி. சிறுகை நீட்டிக் கேட்டு உண்பது பாதி எனில் பிறர் மனை சென்று உறியில் உள்ளதைக்கூட திருடித் தின்பது மீதி! வெண்ணெய்க்காடும் பிள்ளை இவன் மாயன் தான்!

யார் இந்த மாயன்? தம்மை உகப்பாரைத் தாம் உகக்கும் மெய்யன் இவன்! ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் அரங்கன் இவனே! ஆரா அமுதனும் இவனே! மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களையும் பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே என்னும்படி பிச்சேற்றவல்ல இம்மாயனின் தன்மைதான் என்னே! ஓதக்கடலின் ஒளிமுத்தும் சாதிப்பவளமும் சேர்ந்து கலந்தாற்போல் பரத்வமும் ஸௌலப்யமும் விரவிக் கலந்து மிளிரும் கண்ணபிரான் இவன்! கிருஷ்ணன் என்னும் திருநாமத்திற்கேற்ப அடியார்களை ஆகர்ஷிக்கும் இவனது தோற்றம் போல் அவதார நோக்கமும் அற்புதமானது! அதுபற்றி மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்!

*ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ|*
*அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:||*

கவலைப்படாதே என்று எம்மாபாவியர்க்கும்
அடைக்கலம் தந்துகக்கும் நம் கண்ணனல்லால்
நமக்கு இல்லையோர் கண்ணே! ஆக, ஆயனாய்
வந்த இக்கண்ணன் மாயனே! மாயனைப் பணிந்து
வணங்குவதல்லால் மற்றொன்றும் வேண்டாம்
மனமே!

ஸ்ரீ:

# அக்ரூரரின் கதியும் உத்தவரின் கேள்வியும்

ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு

மஹாபாரதத்திலும், ஸ்ரீமத் பாகவதத்திலும், ஸ்ரீ க்ருஷ்ணரின் பல ஸம்பவங்கள் கூறப்பட்டுள்ளன. ப்ருந்தாவனத்திலும் நந்தகோகுலத்திலும் க்ருஷ்ணனின் பால சேஷ்டிதங்களையும், பேராண்மையையும், தெய்வாம்சத்தினையும், கருணையையும் கண்டும் கேட்டும் அனுபவித்துள்ளோம். அவற்றில் சிறப்பாக இரண்டு விஷயங்கள் பல புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது.

**அக்ரூரரின் கதி விசேஷம்**

கம்ஸனின் அரசவையில் அமைச்சராய் இருந்தவர். பலரை அனுப்பியும் கண்ணனை அழிக்க இயலாததால், மதுராவிற்கு அழைத்து வந்து அழிக்க திட்டமிட்டு அக்ரூரர் மூலம் கண்ணனை மதுராவிற்கு அழைத்து வர எண்ணினான். ஆனால் கம்ஸன் அக்ரூரரிடம் மதுராவில் தனுர் யாகம் செய்ய இருப்பதாகவும் அதற்கு கண்ணனையும், பலராமனையும் அழைத்து வருமாறும் அக்ரூரரைப் பணித்தான்.

அக்ரூரர் கம்ஸனின் நம்பிக்கைக்குரிய நண்பன் எனினும், அவர் பகவான் க்ருஷ்ணனிடம் மிகுந்த பக்தி உடையவர். ஸ்ரீக்ருஷ்ணனுக்கு சிறிய தந்தை உறவு ஆக இருந்தாலும், கம்ஸனின் அரசவையிலே இருந்ததால், கண்ணனை நேரில் பார்த்ததில்லை. அவரைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து அவரை சந்திப்பதற்கு மிகவும் ஆவலாய் இருந்தார்.

தனுர் யஜ்ஞம் என்று அவருக்குக் காரணம் கூறப்பட்டிருந்தாலும், கம்ஸனின் உள் நோக்கம் அறிந்திருந்தபடியால், இந்தக் காரணத்திற்காகப் போவதை நினைத்து மிகுந்த மனவருத்தத்துடன் ப்ருந்தாவனம் புறப்பட்டார். எனினும் கண்ணன் மாபெரும் அஸுரர்களைக் கொன்ற வெற்றிக் கதைகளை கேட்டிருந்தபடியால், மன ஸமாதனத்துடன் ப்ருந்தாவனம் அடைகிறார். அது வரையில், கிருஷ்ணனைப் பற்றிய நினைவுடனேயே பயணித்தார்.

இந்த கதி விசேஷத்தை, முக்தாத்மாக்கள் மோக்ஷம் போகும் வரையில் ஸ்ரீமந்நாராயணனின் நினைவுடன் இருக்கவேண்டும் என்று மஹநீயர்கள் உதாஹரித்துக் கூறுவர்.

*ஸோ[அ]யம் ரதேநஸுக்ருதீபவதோ நிவாஸம்*
*கச்சந் மநோரதகணாம்ஸ்த்வயி, தார்யமாணாந்*
*ஆஸ்வாதயந் மூஹுரபாயபயேன தைவம்*
*ஸ்ம்ப்ரார்தயந் பதி ந கிஞ்சிதபி வ்யஜநாத்*
(ஸ்ரீ நாராயணீயம்: தசகம் - 72, ச்லோகம் - 3)



நல்வினை செய்தவனான அந்த அக்ரூரன் உன் இருப்பிடத்திற்குத் தேரில் ஏறிச் செல்லலுற்றான். அப்பொழுது அவன் உன்னிடம், வைத்திருந்த விருப்பங்களின் கூட்டங்களை அடிக்கடி நினைத்துச் சுவைத்தான். அவற்றிற்கு இடையூறு உண்டாகுமோ என்று அச்சத்தால் வழிபடு கடவுளை வேண்டிக் கொண்டான். அந்த நிலையில், அவன் வழியில் ஒன்றையும் அறியவில்லை.

*த்ரக்ஷ்யாமி வேதசத கீதகதிம் புமாம்ஸம்*
*ஸ்ப்ரக்ஷ்யாமி கிம்ஸ்விதபி நாம பரிஷ்வஜேயம்|*
*கிம் வக்ஷ்யதே ஸ கலு மாம் க்வநு வீக்ஷித ஸ்யா-*
*தித்தம்நிநாய ஸ பவந்மயமேவ மார்கம்||*
(ஸ்ரீ நாராயணீயம்: தசகம் - 72, ச்லோகம் - 4)

அவன் வேதங்கள் பலவும் புகழ்ந்துபாடிய சிறப்பினை உடைய பெரியோனான அவனைக் காண்பேனோ? தொடுவேனோ? தழுவிக்கொள்வேனோ? அவனும் என்னிடம் பேசுவானோ? எங்கே பார்ப்பேன்? என்று பலவாறாக எண்ணினான். மேலும் வழிமுழுவதும் அவன் நிறைந்திருப்பதாகவே கருதிக்கொண்டு கடந்து சென்றான்.

இவ்வாறாக எண்ணியபடியே ப்ருந்தாவனம் சேர்ந்து கண்ணனையும், பலராமனையும் மதுராவிற்கு அழைத்துச்செல்கிறார். எல்லா கோபியர்களும் தங்களை விட்டு க்ருஷ்ணன் பிரிவதை எண்ணி மிகவும் வருந்தினார்கள். அவர்களின் வருத்தம் க்ருஷ்ணனை வெகுவாக பாதித்தது, எனினும் கண்ணன் மதுரா போவதை முக்கியக் கடமையாகக் கருதினார்.

ஏனெனில் கிருஷ்ணன் மதுராவிற்கு சென்றால் தான், கம்ஸனை வதம் செய்ய முடியும். எனவே கோபியருக்கு ஸமாதான வார்த்தைகள் கூறி, விரைவில் வருவதாகக் கூறி, பலராமனும் கண்ணனும் அக்ரூரருடன் மதுராவை நோக்கிப் புறப்பட்டனைர். போகும் வழியில் யமுனையில் அவ்விருவரின் அனுமதி பெற்று அக்ரூரர் நீராடச்சென்றார். அங்கே நதியில் க்ருஷ்ணனும் பலராமனும் ஆற்றில் இருப்பதைக் கண்டு மிகுந்த ஆச்சர்யமுற்றார். ஐயமுற்று, நதியை விட்டு வெளியே வந்த அக்ரூரர், தேரில் க்ருஷ்ணனும் பலராமனும் இருப்பதைக்கண்டு வியந்தபடியே மீண்டும் நதிக்குச்சென்றார். இம்முறை, அவர் நதியில், கண்ணனையும் பலராமனையும் தவிர, தேவர்களையும், சித்தர்களையும், சாரணர்களையும், கந்தர்வர்களையும் கண்டார். அனைவரும் ஸ்ரீக்ருஷ்ணனின் முன் வணங்கி நிற்க, சேஷ நாகரின் வளைவான மடி மேல் ஸ்ரீக்ருஷ்ணர் நான்கு திருக்கரங்களுடன் அமர்ந்திருப்பதைக் கண்டார்.

இத்திருக்காட்சியைக் கண்ட அக்ரூரர் மயிர்கூச் செறிந்து நின்றார். பேரின்பக் கடலில் மூழ்கி பலவாறு கண்ணனைத்துதித்தார்.

*ஸ்ரீ பட்டத்ரி, தமது நாராயணீயத்தில்,*

*கிமு சீதலிமாமஹாந் ஜலே யத்*
*புலகோ[அ]ஸாவிதி சோதிதேந தேந|*
*அதிஹர்ஷ நிருத்தரேண ஸார்தம்*
*ரதவாஸீ பவநேச பாஹிமாம் த்வம்||*
(ஸ்ரீ நாராயணீயம்: தசகம் - 73, ச்லோகம் – 10)

அக்ரூரரை நோக்கி, 'உன் உடலின் மயிர்க்கூச்சு மிகுதியாக உள்ளதே, நீரில் குளிர்ச்சி மிகுதியாக இருக்கின்றதோ?' என்று கேட்க, மகிழ்ச்சியின் மிகுதியால் அவனால் விடை கூற இயலவில்லை.

திருக்கோளூர் பெண் பிள்ளை ரஹஸ்யத்தில், அப் பெண்பிள்ளை, ஸ்வாமி இராமானுஜரிடம் தான் அவ்வூரை விட்டுப் போக நினைத்ததற்கான காரணத்தைக் குறிப்பிடுகையில், 'அழைத்து வருகின்றேன் என்றேனோ அக்ரூரரைப் போல' என்றுரைத்து அவரைப் போன்ற பக்தி தனக்கு இல்லை என்று கூறுகிறாள்.

**உத்தவர் கேள்விகள்**

உத்தவர், அக்ரூரரைப் போலவே ஸ்ரீக்ருஷ்ணனின் பால் மிகுந்த பக்தியுடன் இருந்தவர். கண்ணனின் சிறிய ப்ராயம் முதலே அவருக்குப் பணிவிடை கள் செய்து வந்தவர் உத்தவர். தனக்கு என்று கண்ணனிடம் ஏதும் வேண்டியதில்லை.

த்வாபர யுகத்தில் ஸ்ரீக்ருஷ்ணன் உத்தவரிடம், இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும் நன்மைகளும் பெற்றிருக்கின்றனர். உத்தவரே, உமக்கு ஏதாவது நன்மைகள் செய்துவிட்டே அவதாரப் பணியை முடிக்க நினைக்கிறேன் கூறி ஏதாவது வேண்டுமோ கேட்டதற்கு உத்தவர் தனக்கென்று ஏதும் கேட்கவில்லை.

எனினும் சிறு வயது முதலே கண்ணனின் செயல்பாடுகளைக் கவனித்து வந்த உத்தவருக்கு, சொல் ஒன்றும் செயல் ஒன்றும் என்று இருந்த கண்ணனின் லீலைகள் புரியாத புதிராய் இருந்தபடியால் அதன் காரணங்களைத் தெரிந்து கொள்ள விரும்பினார்.

கண்ணன் கீதையில் வாழச்சொன்ன வழிவேறு, வாழ்ந்து காட்டிய வழி வேறாக இருந்த படியால், அந்த புதிருக்கான விடையை அறிய விரும்புவதாகக் கூறினார். ஏனெனில் கண்ணனின் எந்த செயலும் தர்மத்திற்கு விருத்தமாக இருக்காது என்று முழுமையாகத் அறிந்தவர் உத்தவர்.

உத்தவர் கேட்க ஆரம்பித்தார்: 'கண்ணா, உற்ற நண்பர்களின் துயரத்தைத் தீர்க்க அழைப்பு இல்லாமலேயே உதவ நண்பர்கள் முன்வருவார்கள். அங்ஙனம் இருக்க, பாண்டவர்களின் உற்ற நண்பனாயும், அவர்களுக்கு ஆபத்பாந்தவனாயும் இருப்பவனான நீ தர்மரை சூதாட விடக் காரணம் என்ன? எல்லாம் நீயே என்று நம்பிய பாண்டவர்களை அவர்கள் பக்கலில் இருந்து சூதில் வெற்றிபெற வைத்திருக்கலாமே! அல்லது தர்மர் சூது ஆடாமல் தவிர்த்து இருக்கலாமே. அனைத்தையும் இழந்ததோடு மட்டுமல்லாது த்ரௌபதியையும் பணயம் வைத்து அவமானப்பட நேர்ந்ததே, அப்பொழுதாவது பகடைக்காய்கள், தர்மனுக்குச் சாதகமாக விழும்படி செய்திருக்கலாமே! அங்ஙனம் செய்திருந்தால் த்ரௌபதியின் மான பங்கத்தைத் தவிர்த்து இருக்கலாமே!' என்று பலவாறு தன் உள்ளக்கிடக்கையைத் தெரிவித்தார். இந்தக் கேள்விகள் உத்தவருக்கு மட்டுமல்ல நம் போன்றோர்களுக்கும் தோன்றுவன என்பதனைக் கூறவும் வேண்டுமோ?

கேள்விக் கணைகளைக் கேட்டு பகவான் மெல்லிய புன்னகை பூத்தார். பின்னர் அதற்கான விடை கூறத் தொடங்கினார். 'விவேகம் உள்ளவனே ஜயிக்க வேண்டும் என்பது தர்ம நீதி. இந்த சூதாட்டத்தில் துர்யோதனனுக்கு இருந்த விவேகம் தர்மருக்கு இல்லை. தர்மரின் தோல்விக்கு அதுவே காரணம்.

துர்யோதனனுக்கு சூதாடத் தெரியாது ஆனால் பணயம் வைக்க வேண்டும் அளவிற்குப் பொருள் இருந்தது, அதனால் தன் மாமன் சகுனியைச் சூதாடப் பணித்தான். அது விவேகம். தர்மரும் அங்ஙனம் விவேகத்துடன் தன் சார்பாய்த் தன் மைத்துனன் பகடையை உருட்டுவான் என்று சொல்லி இருக்கலாமே? நானும் சகுனியைப் போலவே பகடைகளை உருட்டி இருப்பேனே.

ஆனால் தர்மர் ஆடத் தொடங்கிய முதலே



ஸ்ரீ க்ருஷ்ணனுக்கு இது தெரியக்கூடாது என்று எண்ணி, சூதாட்ட மண்டபத்தில் வராமல் இருக்க வேண்டும் என்று என்னையே வேண்டிக் கொண்டு, என்னைக் கட்டிப் போட்டுவிட்டான். கூப்பிடமாட்டார்களாவென்று மண்டபத்தின் வாயிலிலேயே காத்திருந்தேன். இதர பாண்டவர்களில் எவரேனும் ஒருவர் அழைத்திருந்தாலும் நான் உள்ளே வந்திருப்பேன். ஆனால் அவர்கள் தங்கள் நிலையைக் கண்டு நொந்தும், துர்யோதனனைத் திட்டிக் கொண்டும் இருந்தனர். என்னை அழைக்க மறந்து விட்டனர். அண்ணனின் ஆணைக்குப் பணிந்து, துச்சாதனன் த்ரௌபதியை ஸபைக்கு அழைத்து வந்து மானபங்கம் செய்யும் வரையில், த்ரௌபதியும் தன் பலத்தை நம்பி ஸபையில் வாதங்களை செய்தாளே தவிர என்னை அழைக்கவில்லையே! இறுதியில் தன் பலத்தால் செய்யவியலவில்லை என்ற நிலையில்தான் ‘ஹரி! ஹரி! க்ருஷ்ணா!’ என அபயக்குரல் கொடுத்தாள். சற்றும் தாமதியாமல் அவள் மானத்தைக் காக்க வழி செய்தேன். இதில் என் தவறு ஏதும் உண்டோவென வினவினான்.

எனினும் உத்தவர் விடாது, அங்கனே எனில், அழைத்தால் தான் வருவாயா? நீ ஆபத்பாந்தவனல்லவோ? என வினவ, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படிதான் அமைகிறது நான் நடத்துவதும் இல்லை, குறுக்கிடுவதும் இல்லை, வெறும் ஸாக்ஷிபூதன். அதுதான் தெய்வ தர்மம்.

தீமை நடக்கும் இடத்திலும் தாங்கள் ஸாக்ஷிபூதர் தானோ என்ற கேள்விக்கு, ‘நானருகில் இருக்கிறேன் என்று உணரும் பக்ஷத்தில் உங்களால் தவறுகளோ தீவினையோ நிச்சயமாகச் செய்ய முடியாது. இதனை தர்மர் உணர்ந்திருந்தால் சூதாட்டம் வேறு விதமாக இருந்திருக்கும்.’

இந்த விளக்கத்தை பகவான் கீதையில் ஒற்றை வரியில் ‘மாம் ஏகம் சரணம் வ்ரஜ, மாசுச:’ என உணர்த்தி உள்ளார்.

இந்த உணர்வு, கோபியர்கள் கண்ணன்பால் காட்டிய வ்யாமோகத்திலும் காதலிலும் காட்டிய அன்பிலும் புரியவரும். அவர்களை முழுமையாக ஏற்றுக்கொண்டான்.

இதனை ஸ்ரீ நாராயணீயம், ஸர்கம் 59, ச்லோகம் 10-ல், உணரமுடியும்.

*ராகஸ்தாவது ஜாயதே ஹி ஸ்வாபாவாத்*
*மோக்ஷோபாயோ யத்நத: ஸ்யாந்ந வா ஸ்யாத்|*
*தாஸாம் த்வேகம் தத் த்வயம் லப்தமாஸீத்*
*பாக்யம் பாக்யம் பாஹி மாம் மாருதேச||*

‘இயற்கையிலேயே காதல் என்பது உண்டாகிறது. முயற்சியினால் மோக்ஷத்திற்கு உரிய வழி உண்டாகலாம், உண்டாகாமலும் போகலாம். ஆனால் அந்த கோபியர்களுக்கு அவை இரண்டும் ஒன்றாகவே கிடைத்துவிட்டன. அவர்களின் பேறே பேறு.’

இந்தக் கேள்வியும் பதிலும் ஸ்ரீமத் பாகவதத்தில் 11-ம் ஸர்கத்தில், உத்தவ கீதையாக விரிவாகக் கூறப்பட்டுள்ளது. பட்டத்ரி அவர்களும் - ஸ்ரீ நாராயணீயத்தில் ஸர்கம் 76-ல் அழகாய் இதை வர்ணித்துள்ளார்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கை வரும்போது அவன் ஸாக்ஷிபூதனாய் இருப்பதை எங்கனம் உணராது இருக்க முடியும்?

# Important Tenets Of Our Sampradaya ⑰

## One Is The Root-cause And The Other Is The Revelation

Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

The Vedas and the Divya Prabandham are the hallmarks of our Sri Sampradaya. While the Vedas thrive on Brahmanathvam, Azhwars' great works are prominent tools for Vaishnavathvam.

The Vedas are described as the breath of the Lord Supremo Sriman Narayana. They unequivocally assert the supremacy of Vishnu. But their comprehensive, cryptic and complex nature resulted in their better part being incomprehensible. It took the infinite mercy of the Lord Himself to be born as Azhwars through His own features like the Discus, the Conch, etc. and expound the essence of the Vedas in verses soaked in devotion, sweetness and succinctness.

Swami Desika, in the first verse of Adhikaara Sangraham, says that with the help of Aruli-cheyal, we are able to "comprehend the things which hitherto remained cryptic' (தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே). In the sixth Paasuram, he hails Sriman Nathamuni as the one who taught the sweet and lilting Tamil works of Azhwars (தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்). Further, he calls the Divya Prabandham as 'sweet musical Tamil Vedam' and salutes its exponents, in Paasuram No. 22 (நம் பண்ணமரும் தமிழ்வேதம் அறிந்த பகவர்களே).

To draw a metaphorical parallel, the Vedas are raw, unprocessed gold bar and their Tamil counterpart a nicely carved out idol. The gold without the carving will offer little beauty to the common man and the idol without the valuable raw material could not have emerged. Similarly, Azhwars' works without their originals are improbable just as the Vedas without Aruli-cheyal are incomprehensible.

The point to be noted here is without the carving and the resultant idol form, the beauty of the gold would largely remain inconspicuous and unappreciable. In essence, if the Vedas are the root-cause of our philosophy, Azhwars' pourings are the revelation. Divya Prabandham corroborates and complements the Vedas and concretises our glorious Sampradaya. The Vedas and Divya Prabandham are like the two eyes and hence indispensable for our Sanaathana Dharma-ridden tradition. Though Azhwars were of different creed and caste, they followed the Varnaasrama Dharma as laid down in the scriptures to the letter.

An incident in the life of Thirumazhisai Azhwar is as interesting as it is educative. During a temple Uthsavam, there was the procession on and, as is the custom, the Vedaparayana Goshti followed the Lord. The Vedic scholars paused the chanting for a moment and, while resuming, forgot where to continue from. The Azhwar, a Divine Avathara that he was, knew all the Vedas intuitively, but since he was born of a low caste, could not chant them. But he wanted to somehow help the scholars to continue from where they had left off, and so, did it adroitly and suggestively.

He simply pulled a grass of the black paddy grain and tore it into pieces to indicate what has to be chanted (க்ருஷ்ணானாம் வ்ருஹீணாம் நகநிர்பிந்நம்! – meaning tearing the black paddy grass).

His commitment to the Varnaasrama Dharma also finds expression in Paasuram No. 90 of Thiru-chandha Viruththam (குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலேன் – "I have not been born in any of the top-four castes'). It was a faith, a principle ever so assiduously followed by all the Azhwars.

"Vedaath Saasthram Param Naasthi', "Veda: Akhila: Dharma Moolam', "Idham Vedamoola Pramaanaath' are some of the well-known references that highlight the stature of the Vedas as the ultimate authority.

வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து... – "We should seek to worship the Lord led by Vedic scholars', says Nammazhwar (Thiruvoymozhi 4-6-8).

Nammazhwar's four Prabandhams are held to be the essence of the four Vedas. Madhurakavi Azhwar, referring to his Acharya-God Nammazhwar affirms:

மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என் நெஞ்சுள் நிறுத்தினான்...

"(Satakopa) Instilled in my heart the deep sense of Vedic thought, through his songs…'

Thirumangai Azhwar, throughout all his works extols the greatness of the Vedas and their practitioners. Andal's ThirupPaavai is hailed as the seed of all the Vedas (வேதமனைத்துக்கும் வித்து), in the sense that it contains in a nut shell all that is found in the Vedas.

Sri Bhagavath Ramanuja, though he did not compose any Tamil work, was an authority on Divya Prabandham and conducted regular Kaalakshepams on Divya Prabandham. In fact, he directed his nephew ThirukKurugaipPiraan Pillaan to write a short commentary for Thiruvoymozhi which is known as the 6,000 Padi. Also the Acharya has composed Thaniyans for Divya Prabandham in Tamil. He became the elder brother of Andal (பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்) by fulfilling her promise of offering 100 containers of butter and Akkaaravadisil to the Lord of Thirumaalirun-cholai (Naachiyaar Thirumozhi 9-6).

Sarva Thanthra Swathanthra Swami Desika, a master par excellence in both the disciplines, has composed 24 Prabandhams in Tamil (of which five are extinct). He always held the Vedas and the Divya Prabandham in equal esteem and revered the scholars of both the disciplines. In Meyviradha Maanmiyam, he says "Long live the Vedic scholars of the region of Thondai Naadu; long live the exponents of the pure Southern Veda' (தொண்டை மண்டல வேதியர் வாழவே, தூய தென்மறை வல்லவர் வாழவே!). It was the great Acharya who helped the resumption of Divya Prabandham recitation in the temple of Lord Varadaraja when a section of the people objected to the Azhwars' works being recited and stopped the custom.

Therefore, both the Vedas and the Divya Prabandham are of equally paramount importance to our Sampradaya and there is no question of superiority of one over the other. Any effort to undermine either in favour of the other would not only be preposterous but also detrimental to the cause of the Sampradaya.

The call of the hour is a concerted and a conscious endeavour to promote both the Vedas and Divya Prabandham and help their sustenance and thriving. It is the bounden duty of every Srivaishnava to direct his/her effort towards that goal.

***(to be continued…)***


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

**பித்ரு காரியங்கள் செய்வதற்கு,**
**சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச்**
**சொந்தமான (G.K. மண்டபம் அருகில்)**
**அறைகள் வாடகைக்கு விடப்படும்.**

விவரங்களுக்கு தேவஸ்தான
அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஶ்ரீ:

# Srimath Rahasya-Thraya Saaram

## A Manual For Beginners ⑰

Smt. Padmalatha Sridharan, Chennai

**Chapter - 16**

**Purushaartha Kaashta Adhikaram**

Why is it that Bhagavatha Kainkaryam is considered the endpoint of Bhagavath Kainkaryam?

A being is considered subservient (Sesham) to any another being if it conveys some purpose to it. The one thus conveyed is Seshi, as per Vedartha Sangraham of Sri Ramanuja. A Chetana is eternally subservient to Bhagavan and hence he has to convey some purpose suitable to his Svarupa and if he does that through his body that is common even to Achetanam. So, it should be through his Jnanam so that there is differentiation.

When he is in this world, and his functions are against Sasthras he causes Leela Rasam to Bhagavan and, in that sense, he conveys a purpose. If he conducts himself as per Sasthras, he causes immense pleasure to Isvara and as He said in Gita, this Chetana gratifies His instinct of charitability and thus conveys a purpose.

While in Sri Vaikuntam, Mukthas and Nithyas cognise His will directly and their functions cause Bhoga Rasam in Him and thus they convey their purpose and are Seshas in that manner. This is common to Prapannas also because they know His will from Sasthras and function accordingly.

If he goes against the Sasthras, then harm will befall him certainly in this world. But if he follows Sasthras as Badhdha, and follow Bhagavan's commands as Muktha, he gets supplementary benefits as part of ultimate benefit awaiting him. Any intelligent action that he undertakes as against involuntary ones, have to be as per His command and it is well documented that Bhagavatha Kainkaryam is what pleases Bhagavan the most. If one praises the prince, the king is happy and thus, it is obvious that Bhagavan is pleased if his favourite sons, the Bhagavathas are feted. He accepts the Kainkaryam as performed to His Antharyami roopam.

It is fitting in another aspect too, says Swami. Just as a great king removes an ornament or a garland from his chest and puts it on his child, or a courtier, royal horse, or elephant, etc., He has made us subservient to another Jeeva, viz., a Bhagavatha. Once we have submitted our Atmas to Bhagavan who is Omnipotent, He can use it in any manner He pleases and if He makes our Athmas subservient to other Bhagavathas, it is to be accepted with humility. This Seshatvam applies to one another respectively between Bhagavathas. Prapannas' Seshatvam to Bhagavan is caused by his Svarupa and also by His infinite divine attribute. As Sri Periyazhwar said, Bhagavathas can sell us for profit if they wish so and it is mandatory to do Kainkaryam to Bhagavathas as per our ability.

It is not contradictory (though it may seem so) to be subservient to Bhagavathas when we have professed our allegiance only to Bhagavan and not to any other Jeevas (like Brahma, Siva, etc.). A Prapanna is like a devoted chaste wife and just as she strives to fulfil her husband's wishes, he has to fulfil Bhagavan's wishes as laid down in scriptures, which is Kainkaryam to Bhagavathas, and hence this subservience will not conflict with his subservience to Bhagavan.

This Bhagavatha Seshatvam continues eternally even in Sri Vaikuntam, and hence it can be called natural (Svaabhavikam). Or it could be called external (Aupadhikam) also, since he gets to know of his eternal connection to Bhagavan and is subservient through Him to Bhagavathas.

Here there is an objection raised as to how a Prapanna can be a Sesha to a Bhagavatha and Seshi to him at the same time? (Since this Prapanna is also a Bhagavatha and the other Bhagavatha has Seshatvam towards this one). Swami clarifies that there is nothing wrong in conveying purpose to each other, and hence being both Seshi and Sesha to one another is not mutually exclusive.

Both Bhagavathas attain Svarupa Nishtai because of this and both of them get to do Bhagavatha Kainkaryam to please Bhagavan and hence the cornerstone of Purushartham (benefit) is realised by both.

Thus, a Kruthakruthya should seek out a Paramaikanti, who does not have the faults of immoral desires, unreasonable doubts, regard for other deities, self-indulgence, self-realisation (Kaivalyam), etc. and strive for his approval by doing Kainkaryams to him.

***(to be continued…)***

ஸ்ரீ:



# *With Pranams:*

**N. Seshadri & Family**

Flat No. 11, Lakshmi, 8/16, Justice Sundaram Road,
Mylapore, Chennai - 600 004.

&

**Kimsuka Narasimhan,**
**S. Narasimhan and Pushpa Narasimhan**

**SVDD thanks N. Seshadri & Family, Kimsuka Narasimhan, S. Narasimhan and Pushpa Narasimhan** for sponsoring this month's issue of Desika Sandesam

**Sponsorships and donations towards publication expenses are welcome**





ஆடி கருடன் - ஆளவந்தார் திருநக்ஷத்ரம்





ப்ருந்தாரண்ய க்ஷேத்ர (திருவல்லிக்கேணி) விஜயோத்ஸவம்